**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**
**கீழ்பென்னாத்தூர்**
**முன்னிலை : திரு. M.C.அருண், L.L.B.,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், கீழ்பென்னாத்தூர்**
**2026ம் ஆண்டு, மார்ச் மாதம், 16ம் நாள், திங்கட்கிழமை.**
**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.171/2024**
**CNR No. TNTM24001931-2024**

அரசுக்காக
காவல் உதவி ஆய்வாளர்,
கீழ்பென்னாத்தூர் காவல் நிலையம்,
திருவண்ணாமலை மாவட்டம்.
குற்ற எண். 367/2017 ......குற்றமுறையிடுபவர்

//எதிராக//

ராஜீவ் குமார், த/பெ. ரகோத்தமன்,
எண். 408, மெயின் ரோடு, சோ.புதூர், சோமாசிப்பாடி அஞ்சல்,
கீழ்பென்னாத்தூர் தாலுக்கா, திருவண்ணாமலை மாவட்டம்.

......குற்றஞ்சாட்டப்பட்ட நபர்கள்

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தின் 07.04.2021ம் தேதியிட்ட R.O.C.No. 814/2020/RG/F1ன் படியும், குற்றவியல் நடைமுறை விதிகள், 2019, விதி 106(4)ன் படியும் வழக்கின் சுருக்கம்,

| | | |
|---|---|---|
| குற்றம் முறையிடுபவர் | : | அரசுக்காக, காவல் உதவி ஆய்வாளர், கீழ்பென்னாத்தூர் காவல் நிலையம். |
| குற்றம் சாட்டப்பட்டவர் | : | ராஜீவ் குமார், த/பெ. ரகோத்தமன், எண். 408, மெயின் ரோடு, சோ.புதூர், சோமாசிப்பாடி அஞ்சல், கீழ்பென்னாத்தூர் தாலுக்கா, திருவண்ணாமலை மாவட்டம். |
| நிலையக்குற்ற எண் | | குற்ற எண். 367/2017 |
| குற்றம் சாட்டப்பட்டது | : | எதிரி மீது இதச பிரிவு 279, 337-ன் கீழ் |
| குற்றச்சாட்டு வனையப்பட்டது | : | எதிரி மீது இதச பிரிவு 279, 304(A)-ன் கீழ் |
| குற்றம் நிகழ்ந்த நாள் | : | 06.08.2017 |

| | | |
|---|---|---|
| தகவல் தெரிவிக்கப்பட்ட நாள் | : | 06.08.2017 |
| எதிரி கைது செய்யப்பட்ட நாள் மற்றும் எதிரி நீதிமன்ற காவலில் இருந்த நாட்கள் | : | நிலைய ஜாமீன் பெற்று சென்றுள்ளார். |
| எதிரிகள் பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | : | நிலைய ஜாமீன் பெற்று சென்றுள்ளார். |
| குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | : | 15.09.2017 |
| குவிமுச பிரிவு 240 ன் கீழ் எதிரியிடம் குற்றச்சாட்டு குறித்து கேட்கப்பட்ட நாள் | : | 30.07.2021 |
| சாட்சிகள் விசாரணை தொடங்கிய நாள் | : | 25.09.2023 |
| சாட்சிகள் விசாரணை முடிவடைந்த நாள் | : | 11.03.2026 |
| குவிமுச பிரிவு 294(3)ன் கீழ் மனுத்தாக்கல் செய்யப்பட்ட மனுக்களின் விபரம் | : | அரசுத் தரப்பில் புலன் விசாரணை அதிகாரியின் சார்பில் சாட்சியம் அளிக்க கூடுதல் சாட்சியை அனுமதிக்கக் கோரி கு. வி.மு.ச. பிரிவு 294(3)ன் கீழ் மனு M.P.No.03/2026 தாக்கல் செய்யப்பட்டு 11.03.2026 அன்று இந்நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டுள்ளது. |
| முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட தேதிகள் | : | (see table below) |

| | முதல் விசாரணை | குறுக்கு விசாரணை |
|---|---|---|
| அ.சா.1 | 25.09.2023 | இல்லை |
| அ.சா.2 | 19.08.2024 | இல்லை |

| | | |
|---|---|---|
| அ.சா.3 | 19.08.2024 | இல்லை |
| அ.சா.4 | 22.01.2026 | 22.01.2026 |
| அ.சா.5 | 29.01.2026 | 29.01.2026 |
| அ.சா.6 | 11.03.2026 | 11.03.2026 |

| | | |
|---|---|---|
| குவிமுச பிரிவு 313(1)(b)ன் கீழ் எதிரியிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள் | : | 12.03.2026 |
| தலைமறைவு எதிரிகள் குறித்த விபரம் | : | இல்லை |
| நீதிமன்ற வழக்கு விசாரணைக்கு விதிக்கப்பட்ட தடை குறித்த விபரம் | : | இல்லை |
| தண்டிக்கப்பட்டது | : | இல்லை |
| தீர்மானம் | : | குற்றவாளி அல்ல |
| முடிவு | : | எதிரியை குற்றவாளி அல்ல என்று குவிமுச பிரிவு 255(1)–ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. |

இந்த வழக்கானது கடந்த 24.07.2020–ம் தேதியன்று நீதித்துறை நடுவர் நீதிமன்றம் – II, திருவண்ணாமலையில் ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.156/2020 ஆக கோப்பில் எடுக்கப்பட்டு, பின்னர் திருவண்ணாமலை முதன்மை மாவட்ட நீதிபதி அவர்களின் விடுவி எண்.6035/2024, 22.11.2024ம் உத்தரவின் படி கடந்த 19.11.2024ம் தேதியன்று இந்நீதிமன்றத்தில், ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.171/2024 ஆக கோப்பில் எடுக்கப்பட்டு, அரசுத் தரப்பில் கற்றறிந்த

அரசு குற்றத் தொடர்வுத் துறை உதவி வழக்கறிஞர் நிலை – 2, கீழ்பென்னாத்தூர், திரு. K. சங்கர் அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. D. பாண்டுரங்கன் அவர்கள் முன்னிலையாகியும், இறுதியாக இவ்வழக்கு கடந்த 12.03.2026–ம் தேதி என் முன்பு விசாரணைக்கு வரப்பெற்றும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## தீர்ப்புரை

இவ்வழக்கானது கீழ்பென்னாத்தூர் காவல் உதவி ஆய்வாளர் குற்ற எண்.367/2017–ல் மீது இதச பிரிவுகள் 279, 304(A)–ன் கீழ் எதிரியின் மீது தாக்கல் செய்துள்ள குற்ற இறுதியறிக்கையின் பேரில் தொடரப்பட்டதாகும்.

**1. அரசு தரப்பு வழக்கு யாதெனில்,** கடந்த 06.08.2017ம் தேதி பகல் 02.00 மணிக்கு திருவண்ணாமலை – திண்டிவனம் மெயின் ரோட்டில் மலப்பாம்பாடி கூட்டுரோடு அருகில் உள்ள எழில்நகர் எதிரே பாலத்திடம், சாட்சி–1 அண்ணாமலை என்பவரின் தகப்பனார் இறந்த ரங்கநாதன் என்பவர் மேற்கிலிருந்து கிழக்காக இடதுபுறமாக நடந்து சென்ற போது அவருக்கு பின்னால் மேற்கிலிருந்து கிழக்காக சென்ற TN 25 BB 0004 என்ற என்னுள்ள Royal Enfield இருசக்கர வாகனத்தை அதன் ஓட்டுநரும் இவ்வழக்கில் கண்ட எதிரி ராஜீவ் குமார் என்பவர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், ஓட்டிக்கொண்டு வந்து ரங்கநாதன் மீது மோதிவிட்டுள்ளார் மேற்படி விபத்தில் ரங்கநாதனுக்கு உச்சந்தலையிலும், நெற்றியின் இடதுபுறமும், இடது கால் முட்டி, வலது

முட்டிக்கு கீழ், கணுக்கால் பாதம் ஆகிய இடங்களில் பலத்த ரத்தகாயங்கள் ஏற்பட்டு சிகிச்சைக்காக திருவண்ணாமலை அரசு மருத்துவமனையில் சேர்த்தும் அங்கு உள்நோயாளியாக இருந்து டிஸ்சார்ஜ் ஆகி வீட்டுக்கு வந்து இருந்தவர் விபத்தினால் உடலில் ஏற்பட்ட பலத்த காயங்கள் காரணமான "Opinion as to cause of death – The deceased would appear to have died due to coronary arterey disease with evidence of both bone fracture of right leg" 26.08.2017 ஆம் தேதி மதியம் 03.00 மணிக்கு இறந்துவிட்டார். மேற்படி நபருக்கு விபத்தன் மூலம் இறப்பு ஏற்படுவதற்கு காரணமாக இருந்த எதிரிக்கு எதிராக இ.த.ச.பிரிவு 279, 304(A)–ன் கீழும் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளார் என்று கூறி கீழ்பென்னாத்தூர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளதின் பேரில், ஆவணங்களை பரிசீலனை செய்த இந்நீதிமன்றம், வழக்கினை மேற்படி எண்ணில் கோப்புக்கு எடுத்து, எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்ப உத்தரவிடப்பட்டது.

**2. எதிரிக்கு வழக்காவணங்கள் வழங்கி, குற்றங்கள் குறித்து வினவிய விவரம்:**

இவ்வழக்கின் எதிரிக்கு அழைப்பாணை அனுப்பியதன் பேரில், எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானதும், அரசுத்தரப்பு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும், கு.வி.மு.ச. பிரிவு 207ன் கீழ் எதிரிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டு, எதிரிக்கு போதிய கால அவகாசம் அளித்து, இருதரப்பும் கேட்கப்பட்டு, ஆவணங்கள் பரிசீலனை செய்த வகையில், எதிரி இவ்வழக்கின் படியான குற்றத்தை புரிந்துள்ளார் என்பதை

அனுமானிக்க போதிய அடிப்படை ஆதாரங்கள் இருந்ததால், எதிரி மீது இதச பிரிவுகள் 279, 304(A)–ன் கீழும், குற்றச்சாட்டு வனைந்து, எதிரியிடம் குற்றம் குறித்து வினவியபோது, தன் மீதான குற்றச்சாட்டுகளை மறுத்து, தான் குற்றமற்றவர் என்று கூறியதால், அரசு தரப்பில் சாட்சிகளின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டு, அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.6 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அவர்கள் தரப்பில் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டது.

3. **அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம்**

அ.சா.1 அண்ணாமலை என்பவரின் தந்தை இறந்த ரங்கநாதன் கடந்த 06.08.2017ம் தேதி பகல் 02.00 மணிக்கு திருவண்ணாமலை – திண்டிவனம் மெயின் ரோட்டில் மலப்பாம்பாடி கூட்டுரோடு அருகில் உள்ள எழில்நகர் எதிரே பாலத்திடம், சாட்சி–1 அண்ணாமலை என்பவரின் தகப்பனார் இறந்த ரங்கநாதன் என்பவர் மேற்கிலிருந்து கிழக்காக இடதுபுறமாக நடந்து சென்ற போது அவருக்கு பின்னால் மேற்கிலிருந்து கிழக்காக சென்ற TN 25 BB 0004 என்ற என்னுள்ள Royal Enfield இருசக்கர வாகனத்தை அதன் ஓட்டுநரும் இவ்வழக்கில் கண்ட எதிரி ராஜீவ் குமார் என்பவர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், ஓட்டிக்கொண்டு வந்து ரங்கநாதன் மீது மோதிவிட்டுள்ளார் மேற்படி விபத்தில் ரங்கநாதனுக்கு உச்சந்தலையிலும், நெற்றியின் இடதுபுறமும், இடது கால் முட்டி, வலது முட்டிக்கு கீழ், கணுக்கால் பாதம் ஆகிய இடங்களில் பலத்த

ரத்தகாயங்கள் ஏற்பட்டு சிகிச்சைக்காக திருவண்ணாமலை அரசு மருத்துவமனையில் சேர்த்தும் அங்கு உள்நோயாளியாக இருந்து டிஸ்சார்ஜ் ஆகி வீட்டுக்கு வந்து இருந்தவர் விபத்தினால் உடலில் ஏற்பட்ட பலத்த காயங்கள் காரணமான "Opinion as to cause of death – The deceased would appear to have died due to coronary arterey disease with evidence of both bone fracture of right leg" 26.08.2017 ஆம் தேதி மதியம் 03.00 மணிக்கு இறந்துவிட்டார்.

கடந்த 06.08.2017ம் தேதி கீழ்பென்னாத்தூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது 16.00 மணியளவில் திருவண்ணாமலை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலைப் பெற்று அங்கு சென்று உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த ரங்கநாதன் வயது–60 த/பெ. குப்புசாமி, என்பவர் வாகன விபத்தில் பலத்த காயமடைந்து சுயநினைவின்றி இருந்ததால் அங்கிருந்த அவருடைய மகன் அண்ணாமலை வயது–38, த/பெ. ரங்கநாதன் என்பவரிடம் விபத்து சம்மந்தமாக **அ.சா.ஆ.1** புகார் வாக்குமூலம் பெற்றுள்ளார். பின்னர் நிலையம் சேர்ந்து 18.00 மணியளவில் மேற்படி புகார் மனுவினை பரிசீலனை செய்து நிலைய குற்ற எண். 367/2017, ச/பி. 279, 337 இ.த.ச.வின் படி **அ.சா.ஆ.3** முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். பின்னர், மறுநாள் காலை 07.00 மணிக்கு சம்பவயிடமான திருவண்ணாமலை – திண்டிவனம் மெயின்ரோடு மலப்பாம்பாடி கூட்டுரோடு அருகில் எழில் நகர் பாலத்திடம் சென்று சாட்சிகள்

பழனிவேல், ஆனந்தன் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு, **அ.சா.ஆ.4** மாதிரிவரைபடம் வரைந்து **அ.சா.ஆ.5** பார்வைமகசர் தயார் செய்துள்ளார். பின்னர் சாட்சிகள் புகார்தாரர் அண்ணாமலை, சம்பவ சாட்சிகளான லட்சுமி, காசி, ராம்கி, சிவராஜ் மற்றும் பார்வை மகசர் சாட்சிகளான பழனிவேல் மற்றும் ஆனந்தன் ஆகியோரை தனித்தனியா விசாரணை செய்து வாக்கமூலம் பதிவுசெய்துள்ளார். பின்னர் சம்பவயிட சாட்சிகளின் விசாரணையின் மூலம் சம்பவம் நடந்தது உண்மை என தெரியவரவே இவ்வழக்கின் எதிரியை தேடிவந்த நிலையில் வழக்கின் எதிரி ராஜீவ்குமார், வயது–30, த/பெ. ரகோத்தமன் என்பவரை அன்று மாலை 16.30 மணிக்கு கைது செய்து தக்க இருநபர் பிணையம் பெற்று நிலைய பிணையில் விடுவித்தள்ளார். பின்னர் விபத்து ஏற்படுத்திய வாகனமான TN 25 BB 0004 ராயல் என்பீல்டு இருசக்கர வாகனத்தை விபத்தின் காரணம் அறியும்பொருட்டு மோட்டார் வாகன ஆய்விற்கு உட்படுத்தியுள்ளார். பின்னர் 12.08.2017ம் தேதி விபத்தில் காயம்பட்ட ரங்கநாதன் திருவண்ணாமலை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் இருந்து சிகிச்சை முடித்து வீட்டிற்கு வந்து 26.08.2017ம் தேதி மாலை 03.00 மணியளவில் வீட்டில் இறந்துவிட்டதாக வாதியான அண்ணாமலை நிலையம்வந்து வாகனவிபத்து காரணமாக இறந்துவிட்டதாக கொடுத்த தகவலின் பேரில் இறந்தவரின் வீட்டிற்கு சென்று பிரேதத்தை கைப்பற்றி திருவண்ணாமலை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் ஒப்படைத்துள்ளார். பின்னர் மறுநாள் 27.08.2017ம் தேதி இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளை 279, 337

இ.த.ச.வில் இருந்து ச/பி. 279, 304(A) இ.த.ச.வாக சட்டப்பிரிவு மாற்றம் செய்து **அ.சா.ஆ. 6** சட்டப்பிரிவு மாற்று அறிக்கை தாக்கல் செய்துள்ளார். பின்னர் அன்றைய தினமே காலை 10.30 மணிக்கு திருவண்ணாமலை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை சவக்கிடங்கிடம் இருந்த விபத்தில் இறந்துபோன ரங்கநாதன் என்பவரின் பிரேதத்தின் மீது சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார் முன்னிலையில் **அ.சா.ஆ.7** பிரேதவிசாரணை மேற்கொண்டுள்ளார். பின்னர் பிரேத விசாரணை சாட்சிகளான ராஜ்கண்ணு, விஜய், முனுசாமி, பொன்னுசாமி, சக்கரபாணி ஆகியோரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவுசெய்துள்ளார். பின்னர் ரங்கநாதன் என்பவரின் இறப்பின் காரணம் அறியும்பொருட்டு பிரேதத்தை பிரேத பரிசோதனைக்காக தலைமைக் காவலர் 321 செல்வம் என்பவரிடம் ஒப்படைத்து பிரேதத்தை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தியுள்ளார். பின்னர் விபத்தில் காயம்பட்ட ரங்கநாதன் என்பவருக்கு முதலுதவி சிகிச்சை அளித்த மருத்துவர். திரு. நாகராஜன் என்பவரை விசாரணை செய்து **அ.சா.ஆ.8** விபத்துபதிவேட்டுடன் கூடிய காயச்சான்று பெற்று வாக்குமூலம் பதிவுசெய்துள்ளார். இத்துடன் உதவி ஆய்வாளர் தனது புலன் விசாரணையை முடித்து பின்னர் மேல் விசாரணைக்காக இவ்வழக்கை காவல் ஆய்வாளர் பார்வைக்கு வைத்துள்ளார். பின்னர் இவ்வழக்கை தனது பார்வைக்கு வைத்திருந்ததை காவல் ஆய்வாளர் தனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சாட்சிகள் அண்ணாமலை, லட்சுமி, காசி, ராம்கி, சிவராஜ், பழனிவேல், ஆனந்தன், ஏழுமலை, சிவலிங்கம், ஆறுமுகம், ராமசாமி ஆகியோரை விசாரணை செய்தபோது மேற்படி சாட்சிகள்

அனைவரும் உதவி ஆய்வாளரிடம் கூறியதையே தன்னிடம் கூறியதால் மறுவாக்குமூலம் ஏதும் பதிவுசெய்யாமல் விடுத்துள்ளார். பின்னர் 15.09.2017ம் தேதியன்று வழக்கில் இறந்துபோன ரங்கநாதன் என்பவருக்கு திருவண்ணாமலை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் திரு. கமலக்கண்ணன் என்பவரை விசாரணை செய்து **அ.சா.ஆ.9** பிரேதபரிசோதனை அறிக்கைப் பெற்று வாக்குமூலம் பதிவுசெய்துள்ளார். பின்னர் பிரேத பரிசோதனை அலுவலக்கு சென்றுவந்த தலைமைக் காவலர் செல்வம் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவுசெய்துள்ளார். பின்னர் விபத்து ஏற்படுத்திய வாகனமான TN 25 BB 0004 என்ற ராயல் என்பீல்டு இருசக்கர வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வு செய்த மோட்டார் வாகன ஆய்வாளர் திரு. ராம்குமார் என்பவரை விசாரணை செய்து **அ.சா.ஆ.2** மோட்டார் வாகன ஆய்வறிக்கை பெற்று வாக்குமூலம் பதிவுசெய்துள்ளார். இத்துடன் தனது புலன்விசாரணை முடித்து எதிரிக்கு எதிராக 15.09.2017ம் தேதியன்று குற்ற இறுதியறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**4. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் விபரம்**

அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்தும், சான்றாவணங்களிலிருந்தும் தெரிய வருவது யாதெனில்,

**4.1)அ.சா. 1 –அண்ணாமலை,** தன்னுடைய சாட்சியத்தில், தான் திருவண்ணாமலையில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன் என்றும்,

தேதி, மாதம் நினைவில்லை சுமார் 6 வருடங்களுக்கு முன்பு திருவண்ணாமலையிலிருந்து திண்டிவனம் செல்லும் சாலையில் தன்னுடைய தகப்பனார் ரெங்கநாதன் என்பவர் நடந்து சென்று கொண்டிருந்தபோது அவருக்கு எதிரே வந்த என்பீல்டு வண்டியில் வந்த நபர் தன் தகப்பனார் மீது மோதி விபத்து ஏற்படுத்தியதாக தனக்கு தொலைபேசி மூலம் தகவல் தெரிவித்தார்கள் என்றும், தான் கேள்விப்பட்டு சம்பவயிடம் சென்று பார்த்தபோது தன்னுடைய தகப்பனாருக்கு தலையிலும், நெற்றியிலும் மற்றும் இரண்டு கால்களிலும் அடிபட்டு இருந்தது என்றும், காயம் அடைந்த அவரை ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனையில் அனுமதித்தோம் என்றும், பின்னர் அவர் சிகிச்சை பலன் இல்லாமல் ஒரு மாதம் கழித்து இறந்துவிட்டார் என்றும், விபத்து ஏற்படுத்திய நபர் குறித்து தனக்கு தெரியாது என்றும், இந்த வழக்கு சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் அளித்தேன் என்றும், சாட்சி அவரிடம் காட்டப்படும் புகார் அவர் அளித்தது என அடையாளம் காட்டுகிறார் அந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும், போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**(4.2) அ.சா. 2 – காசி,** தன்னுடைய சாட்சியத்தில், தான் தற்போது மலப்பாம்பாடியில் வசித்து ஓட்டுனராக பணிசெய்துவருகிறேன் என்றும், சுமார் 5 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் திருவண்ணாமலையில் இருந்து தனது வீட்டிற்கு செல்வதற்காக சைக்கிளில் சென்றுக்கொண்டிருந்த போது திண்டிவனம் ரோட்டில் கூட்டமாக

இருந்தார்கள் என்றும், தான் அங்கு சென்று பார்த்த போது விபத்து நடந்து முடிந்துவிட்டது என்றும், தான் விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றும், போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என்று பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்.

(4.3) **அ.சா. 3 – ராம்கி,** தன்னுடைய சாட்சியத்தில், தான் தற்போது திருவண்ணாமலையில் வசித்து Indane Gas Agency–ல் டெலிவரி மேன் ஆக வேலை செய்து வருகிறேன் என்றும், சுமார் 5 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் தான் தனது நண்பரை பார்க்க திருவண்ணாமலை – திண்டிவனம் மெயின் ரோட்டில் இருசக்கர வாகனத்தில் சென்றுக்கொண்டிருந்த போது சோமாசிப்பாடி அருகே ரோட்டில் கூட்டமாக இருந்தார்கள் என்றும், அங்கு ஒரு முதியவர் விபத்தில் அடிப்பட்டு கிடந்தார் என்றும், அவர் தனது நண்பர் அண்ணாமலை என்பவரின் தந்தை என்றும், விபத்து ஏற்படுத்திய நபரை தான் பார்க்கவில்லை என்றும், பின்னர் அடிப்பட்டு கிடந்த முதியவரை திருவண்ணாமலை அரசு மருத்துவமனைக்கு 108 ஆம்புலென்ஸ் மூலம் அழைத்துச் சென்றார்கள் என்றும், போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்று பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்.

**(4.4) அ.சா. 4 – ராம்குமார்,** மோட்டார் வாகன ஆய்வாளர், தன்னுடைய சாட்சியத்தில், தான் தற்போது மயிலாடு துறை வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை–1 ஆக பணிபுரிந்துவருகிறேன் என்றும், இதற்கு முன் திருவண்ணாமலை வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் பணிபுரிந்த போது

கீழ்பென்னாத்தூர் காவல் உதவி ஆய்வாளர் வேண்டுகோளின்படி குற்ற எண். 367/2017, சட்டப்பிரிவு 279, 337 இ.த.ச. வழக்கில் சம்மந்தப்பட்ட TN 25 BB 0004 என்ற ராயல் என்பீல்டு இருசக்கர வாகனத்தை 08.08.2017 அன்று மதியம் 02.00 மணிக்கு அலுவலகம் அருகில் வைத்து வாகனத்தை ஆய்வு செய்தேன் என்றும், அதில் வாகனப்பதிவேடுகள் சரியாக இருந்தன என்றும், வாகனத்தில் புதிதாக சேதங்கள் ஏதும் தென்படவில்லை என்றும், வாகன கால் நிறுத்தி மற்றும் கைநிறுத்தி சரியாக இருந்தன என்றும், டயர்கள் நல்ல நிலையில் இருந்தன என்றும், இந்த விபத்து இவ்வாகனத்தின் எவ்வித இயந்திரக் கோளாரின் காரணமாகவும் ஏற்படவில்லை என்று கருத்துக்கூறி விபத்து ஆய்வு அறிக்கை வழங்கினேன் என்றும், அந்த விபத்து ஆய்வு அறிக்கை **அ.சா.ஆ.2** ஆகும் என்றும், போலிசார் வழக்கு சம்மந்தமாக தன்னை விசாரணை செய்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**(4.5) அ.சா. 5 – தமிழரசு,** உதவி ஆய்வாளர் (ஓய்வு), கீழ்பென்னாத்தூர், தன்னுடைய சாட்சியத்தில், தான் தமிழ்நாடு காவல் துறையில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்று தற்போது திருவண்ணாமலையில் வசித்து வருகிறேன் என்றும், கடந்த 06.08.2017ம் தேதி கீழ்பென்னாத்தூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது 16.00 மணியளவில் திருவண்ணாமலை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலைப் பெற்று அங்கு சென்று

உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த ரங்கநாதன் வயது–60 த/பெ. குப்புசாமி, என்பவர் வாகன விபத்தில் பலத்த காயமடைந்து சுயநினைவின்றி இருந்ததால் அங்கிருந்த அவருடைய மகன் அண்ணாமலை வயது–38, த/பெ. ரங்கநாதன் என்பவரிடம் விபத்து சம்மந்தமாக புகார் வாக்குமூலம் பெற்றேன் என்றும், பின்னர் நிலையம் சேர்ந்து 18.00 மணியளவில் மேற்படி புகார் மனுவினை பரிசீலனை செய்து நிலைய குற்ற எண். 367/2017, ச/பி. 279, 337 இ.த.ச.வின் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்றும், தான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.3** ஆகும் என்றும், பின்னர் மறுநாள் காலை 07.00 மணிக்கு சம்பவயிடமான திருவண்ணாமலை – திண்டிவனம் மெயின்ரோடு மலப்பாம்பாடி கூட்டு ரோடு அருகில் எழில் நகர் பாலத்திடம் சென்று சாட்சிகள் பழனிவேல், ஆனந்தன் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு, மாதிரிவரைபடம் வரைந்து பார்வைமகசர் தயார் செய்தேன் என்றும், தான் தயார் செய்த மாதிரிவரைபடம் மற்றும் பார்வை மகசர் முறையே **அ.சா.ஆ.4** மற்றும் **அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும், பின்னர் சாட்சிகள் புகார்தாரர் அண்ணாமலை, சம்பவ சாட்சிகளான லட்சுமி, காசி, ராம்கி, சிவராஜ் மற்றும் பார்வை மகசர் சாட்சிகளான பழனிவேல் மற்றும் ஆனந்தன் ஆகியோரை தனித்தனியா விசாரணை செய்து வாக்கமூலம் பதிவுசெய்தேன் என்றும், பின்னர் சம்பவயிடசாட்சிகளின் விசாரணையின் மூலம் சம்பவம் நடந்தது உண்மை என தெரியவரவே இவ்வழக்கின் எதிரியை தேடிவந்த நிலையில் வழக்கின் எதிரி ராஜீவ்குமார், வயது–30, த/பெ. ரகோத்தமன் என்பவரை அன்று மாலை

16.30 மணிக்கு கைது செய்து தக்க இருநபர் பிணையம் பெற்று நிலைய பிணையில் விடுவித்தேன் என்றும், பின்னர் விபத்து ஏற்படுத்திய வாகனமான TN 25 BB 0004 ராயல் என்பீல்டு இருசக்கர வாகனத்தை விபத்தின் காரணம் அறியும்பொருட்டு மோட்டார் வாகன ஆய்விற்கு உட்படுத்தினேன் என்றும், பின்னர் 12.08.2017ம் தேதி விபத்தில் காயம்பட்ட ரங்கநாதன் திருவண்ணாமலை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் இருந்து சிகிச்சை முடித்து வீட்டிற்கு வந்து 26.08.2017ம் தேதி மாலை 03.00 மணியளவில் வீட்டில் இறந்துவிட்டதாக வாதியான அண்ணாமலை நிலையம்வந்து வாகனவிபத்து காரணமாக இறந்துவிட்டதாக கொடுத்த தகவலின் பேரில் இறந்தவரின் வீட்டிற்கு சென்று பிரேதத்தை கைப்பற்றி திருவண்ணாமலை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் ஒப்படைத்து பின்னர் நிலையம் சேர்ந்தேன் என்றும், மறுநாள் 27.08.2017ம் தேதி இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளை 279, 337 இ.த.ச.வில் இருந்து ச/பி. 279, 304(A) இ.த.ச.வாக சட்டப்பிரிவு மாற்றம் செய்துதேன் என்றும், அந்த சட்டப்பிரிவு மாற்று அறிக்கை **அ.சா.ஆ. 6** ஆகும் என்றும், பின்னர் அன்றைய தினமே காலை 10.30 மணிக்கு திருவண்ணாமலை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை சவக்கிடங்கிடம் இருந்த விபத்தில் இறந்துபோன ரங்கநாதன் என்பவரின் பிரேதத்தின் மீது சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார் முன்னிலையில் பிரேதவிசாரணை மேற்கொண்டேன் என்றும், அந்த பிரேத விசாரணை அறிக்கை **அ.சா.ஆ.7** ஆகும் என்றும், பின்னர் பிரேத விசாரணை சாட்சிகளான ராஜ்கண்ணு, விஜய், முனுசாமி, பொன்னுசாமி, சக்கரபாணி

ஆகியோரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவுசெய்தேன் என்றும், பின்னர் ரங்கநாதன் என்பவரின் இறப்பின் காரணம் அறியும்பொருட்டு பிரேதத்தை பிரேத பரிசோதனைக்காக தலைமைக் காவலர் 321 செல்வம் என்பவரிடம் ஒப்படைத்து பிரேதத்தை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தினேன் என்றும், பின்னர் விபத்தில் காயம்பட்ட ரங்கநாதன் என்பவருக்கு முதலுதவி சிகிச்சை அளித்த மருத்துவர். திரு. நாகராஜன் என்பவரை விசாரணை செய்து விபத்துபதிவேட்டுடன் கூடிய காயச்சான்று பெற்று வாக்குமூலம் பதிவுசெய்தேன் என்றும், அந்த விபத்துப்பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று **அ.சா.ஆ.8** ஆகும் என்றும், இத்துடன் தன்னுடைய புலன்விசாரணையை முடித்து பின்னர் மேல் விசாரணைக்காக இவ்வழக்கை காவல் ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன் என்றும், காவல் ஆய்வாளர் தன்னை விசாரணை செய்தார் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**(4.6) அ.சா. 6 – சந்திரசேகர்,** காவல் ஆய்வாளர், கீழ்பென்னாத்தூர், தான் தற்போது திருவண்ணாமலை மாவட்ட நில அபகரிப்பு பிரிவில் (DCB–II)–ல் காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன் என்றும், கடந்த 06.08.2017ம் தேதியன்று கீழ்பென்னாத்தூர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்த போது நிலையப் பொறுப்பில் இருந்த உதவி ஆய்வாளர் திரு. தமிழரசு என்பவருக்கு திருவண்ணாமலை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலைப்பெற்று அங்கு சென்று சிகிச்சையில் இருந்த ரங்கநாதன் சுயநினைவு இல்லாததால்

அவருடைய மகன் திரு. அண்ணாமலை என்பவரிடம் புகார் வாக்குமூலம் பெற்று நிலையம் சேர்ந்து நிலைய குற்ற எண். 367/2017, ச/பி. 297, 337 இ.த.சவின்படி வழக்கு பதிவு செய்துள்ளார் என்றும், அதன் பின்னர் 07.08.2017ம் தேதி காலை 07.00 மணிக்கு சம்பவயிடமான திருவண்ணாமலை – திண்டிவனம் மெயின்ரோடு மலப்பாம்பாடி கூட்டுரோடு எழில் நகர் பாலத்திடம் சென்று சாட்சிகள் பழனிவேல், ஆனந்தன் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு சாட்சிகள் முன்னிலையில் மாதிரிவரைபடம் மற்றும் பார்வைமகசர் தாயர் செய்துள்ளார் என்றும், பின்னர் சம்பவயிட சாட்சிகளான அண்ணாமலை, லட்சுமி, காசி, ராம்கி, சிவராஜ், பழனிவேல், ஆனந்தன் ஆகியோரை ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், சம்பவ இட சாட்சிகளின் விசாரணை மூலமும் உதவி ஆய்வாளரின் விசாரணை மூலம் சம்பவம் உண்மையென தெரியவரவே இவ்வழக்கின் எதிரி ராஜீவ்குமார், த/பெ. ரகோத்தமன் என்பவரை அன்றைய தினம் மாலை 16.30 மணிக்கு கைது செய்து நிலையம் அழைத்து வந்து தக்க இருநபர் பிணையம் பெற்று பிணையில் விடுவித்துள்ளார் என்றும், பின்னர் விபத்து ஏற்படுத்திய வாகனமான TN 25 BB 0004 என்ற ராயல் என்பீல்டு இருசக்கர வாகனத்தை மோட்டார் வாகன ஆய்விற்கு உட்படுத்தியுள்ளார் என்றும், பின்னர் 12.08.2017ம் தேதி இவ்விபத்தில் காயம்பட்ட ரங்கநாதன் திருவண்ணாமலை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை முடித்து வீட்டிற்கு வந்து 26.08.2017ம் தேதியன்று மாலை 03.00 மணியளவில் இறந்துவிட்டதாக அவருடைய மகன் அண்ணாமலை என்பவர்நிலையம்

ஆஜராகி கொடுத்த தகவலைப் பெற்று இந்த ரங்கநாதனின் வீட்டிற்கு சென்று பிரேதத்தை கைப்பற்றி திருவண்ணாமலை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை சவக்கிடங்கில் ஒப்படைத்து பின்னர் இவ்வழக்கின் சட்டப்பிரிவினை 279, 304(A) இ.த.ச.வாக சட்டப்பிரிவினை மாற்றம் செய்துள்ளார் என்றும், பின்னர் 27.08.2017ம் தேதி காலை 10.30 மணிக்கு திருவண்ணாமலை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை சவக்கிடங்கிடம் சென்று விபத்தில் இறந்துபோன ரங்கநாதன் என்பவரின் பிரேதத்தின் மீது சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டுள்ளார் என்றும், பின்னர் பிரேத விசாரணை சாட்சிகளான அண்ணாமலை, ஏழுமலை, சிவலிங்கம், ஆறுமுகம், ராமசாமி ஆகியோரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவுசெய்துள்ளார் என்றும், பின்னர் பிரேதத்தை பிரேதபரிசோதனை செய்ய வேண்டுகோள் கடிதம் கொடுத்து தலைமைக் காவலர் திரு. செல்வம் என்பவரிடம் ஒப்படைத்து பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தியுள்ளார் என்றும், அதன் பின்னர் பிரேதபரிசோதனை முடித்து பிரேதத்தை அவரது குடும்பத்தாரிடம் ஒப்படைத்துள்ளார் என்றும், பின்னர், இவ்வழக்கில் காயம்பட்ட ரங்கநாதன் என்பவருக்கு திருவண்ணாமலை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை அளித்த மருத்துவர். திரு.நாகராஜன் என்பவரை விசாரணை செய்து விபத்துப்பதிவேட்டு பெற்று வாக்குமூலம் பதிவுசெய்துள்ளார் என்றும், பின்னர் இவ்வழக்கை தனது பார்வைக்கு வைத்திருந்ததை தான் தனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சாட்சிகள் அண்ணாமலை, லட்சுமி,

காசி, ராம்கி, சிவராஜ், பழனிவேல், ஆனந்தன், ஏழுமலை, சிவலிங்கம், ஆறுமுகம், ராமசாமி ஆகியோரை விசாரணை செய்தபோது மேற்படி சாட்சிகள் அனைவரும் உதவி ஆய்வாளரிடம் கூறியதையே தன்னிடம் கூறியதால் மறுவாக்குமூலம் ஏதும் பதிவுசெய்யவில்லை என்றும், பின்னர் 15.09.2017ம் தேதியன்று வழக்கில் இறந்துபோன ரங்கநாதன் என்பவருக்கு திருவண்ணாமலை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் திரு. கமலக்கண்ணன் என்பவரை விசாரணை செய்து பிரேதபரிசோதனை அறிக்கைப் பெற்று வாக்குமூலம் பதிவுசெய்தேன் என்றும், அந்த பிரேத பரிசோதனை அறிக்கை **அ.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும், பின்னர் பிரேத பரிசோதனை அலுவலக்கு சென்றுவந்த தலைமைக் காவலர் செல்வம் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவுசெய்தேன் என்றும், பின்னர் விபத்து ஏற்படுத்திய வாகனமான TN 25 BB 0004 என்ற ராயல் என்பீல்டு இருசக்கர வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வு செய்த மோட்டார் வாகன ஆய்வாளர் திரு. ராம்குமார் என்பவரை விசாரணை செய்து மோட்டார் வாகன ஆய்வறிக்கை பெற்று வாக்குமூலம் பதிவுசெய்தேன் என்றும், இத்துடன் தனது புலன்விசாரணை முடித்து எதிரிக்கு எதிராக 15.09.2017ம் தேதியன்று குற்ற இறுதியறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

5. **எதிரியிடம் குற்றம் குறித்து வினவுதல்,**

அரசு தரப்பு சாட்சியங்கள் அ.சா.1 முதல் அ.சா.6 உடன்

முடித்துக்கொள்ளப்பட்டு அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமான பகுதிகள் குறித்து குவிமுச பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் வினவியபோது எதிரிகள் பொய் வழக்கு, பொய் சாட்சியம் என மறுத்து தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லையென கூறி எதிரிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு, இரு தரப்பு வாதுரைகளும் கேட்கப்பட்டது.

**6. அரசுத் தரப்பு வாதம் என்னவென்றால்,**

அரசுத்தரப்பு வழக்கறிஞர் தமது வாதுரையின் போது இவ்வழக்கின் எதிரிகளுக்கு எதிராக குற்றச்சாட்டு அரசுத்தரப்பால் **அ.சா.1** முதல் **அ.சா.6** வரையான சாட்சிகள் மற்றும் **அ.சா.ஆ.1** முதல் **அ.சா.ஆ.9** வரையான சான்றாவணங்களின் மூலம் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும், அ.சா.1ன் சாட்சியத்தை மற்ற சாட்சிகள் ஒத்துரைத்து சாட்சியம் அளித்துள்ளதாகவும், அரசு தரப்பில் தடய பொருளை கைப்பற்றி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாதது அரசு தரப்பு வழக்கை பாதிக்காது என்றும், அரசு தரப்பில் எதிரிகள் மீதான குற்றசாட்டுகள் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதால், எதிரிக்கு தக்க தண்டனை வழங்கவேண்டுமென்று அரசு தரப்பில் வாதிடப்பட்டது.

**7. எதிரிகள் தரப்பு எதிர்வாதம் என்னவென்றால்,**

எதிரியின் கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், அ.சா.1 தன்னுடைய குறுக்கு விசாரணையில், சம்பவத்தை நேரடியாக தெரியாதென்றும், அ.சா.1 முதல் அ.சா.3 வரையானவர்கள் சம்பவத்தை கேள்விபட்டதாக சாட்சியம் அளித்துள்ளதாகவும், நஷ்டஈடு பெறவேண்டி

அ.சா.1 கொடுத்த உண்மைக்கு மாறான புகாரை பெற்று வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும், சந்தேகத்தின் பலனை எதிரிக்கு சாதகமாக அளித்து எதிரியை விடுதலை செய்யும்படி கோரப்பட்டுள்ளது.

8. அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் இதச பிரிவுகள் 279, 304(A) ன் கீழ் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டுள்ளதா? ஆம் எனில் எதிரிக்கு வழங்கப்பட இருக்கும் தண்டனை எவ்வளவு என்பதேயாகும்.

9. இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

**10. இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய கேள்வி யாதெனில் கேள்வி: அரசு தரப்பு சொல்வதுபோல் எதிரி இதச பிரிவுகள் 279, 304(A)ன் கீழான குற்றச்சாட்டுகளின் கீழ் குற்றவாளியா? ஆம் எனில் எதிரிக்கு வழங்கப்பட இருக்கும் தண்டனை என்ன எவ்வளவு என்பதேயாகும்.**

(10.1) மேற்படி சாட்சியம் சான்றாவணம் அனைத்தும் இந்நீதிமன்றம் பரிசீலனை செய்கையில், ரங்கநாதன் அவர்களின் சடலக்கூறாய்வு அறிக்கை மற்றும் இவ்வழக்கின் விசாரணை அதிகாரி தயார் செய்த பிரேத விசாரணை அறிக்கை மேற்படி ரங்கநாதன் என்பவின் இறப்பானது அரசுத்தரப்பில் உறுதி செய்யப்பட்டபட்டுவிட்டது. மேற்படி இறப்பு இவ்வழக்கின் எதிரியான ராஜீவ் குமார் தான் அவருடைய இருசக்கர வானகமான ராயல் என்பீல்டு எண் TN 25 BB 0004 என்பவர் அதிவேகமாக அஜாக்கிரதையாகவும்

ஓட்டிவந்து மேற்படி ரங்கநாதனுக்கு இறப்பை ஏற்படுத்தினார் என்று அரசுத்தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என்று இந்நீதிமன்றம் பார்க்கும் போது, விபத்தை ஏற்படுத்திய ராயல் என்பீல்டு இருசக்கர வாகனத்திற்கு எந்தவொரு சேதாரமும் இல்லை என்று மோட்டார் வாகன ஆய்வாளர் அவரது மோட்டார் வாகன ஆய்வறிக்கையிலும் மற்றும் அவரது சாட்சியத்திலும் சொல்லியுள்ளார். மேலும், கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.2 மற்றும் அ.சா.3 இருவருமே மேற்படி எதிரி ராஜீவ் குமார் தான் மேற்படி இருசக்கர வாகனத்தை ஓட்டிச்சென்று அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், ஓட்டியதாகவோ, அதை அவர்கள் இருவரும் கண்டதாகவோ எந்தவவொரு சாட்சியத்தையும் முன்வைக்கவில்லை. மேலும், மேற்படி சடலக்கூறாய்வின் மூலமாக மேற்படி ரங்கநாதனுக்கு மார்பு, முதுகு, வலது மற்றும் இடது கால் முட்டி ஆகிய இடங்களில் காயங்கள் ஏற்பட்டிருப்பதாக தெிாயவந்துள்ளது. ஆனால் மேற்படி காயங்களும் அதனைத் தொடர்ந்து ரங்கநாதனுக்கு இறப்பை ஏற்பட எதிரிதான் காரணம் என்று அரசுத்தரப்பு சாட்சிகள் யாருமே சாட்சியம் அளிக்கவில்லை. மேலும் இவ்வழக்கின் புகார்தாரரும் ஒரு கேள்வி நிலை சாட்சியம் ஆவார். அவரும் அவருடைய சாட்சியத்தில், எதிரிதான் இருசக்கர வாகனத்தை ஓட்டினார் என்றும் மேலும், அந்த விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் எண் குறிப்பிட்டோ, எதிரியின் அடையாளத்தை குறிப்பிட்டோ எந்தவொரு சாட்சியத்தையும் அளிக்கவில்லை. மேற்படி அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகிய இருவரும் தெள்ளத்தெளிவாக மேற்படி விபத்தை ஏற்படுத்திய நபரை அவர்கள் பார்க்கவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார்கள். அதேபோன்று

விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் எண்ணைக்குறிப்பிட்டு எந்தவொரு சாட்சியமும் அளிக்கவில்லை. மேலும், பிரிவு 60 இந்திய சாட்சிய சட்டத்தின் கீழ் வாய்மொழி சாட்சியம் என்பது நேரடியான சாட்சியம் ஆகும். சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியாக இருந்து நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கவேண்டும் ஆனால் இவ்வழக்கின் கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகிய இருவருமே அரசுத்தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கவில்லை. மேலும், விபத்து சம்பவத்தை எதிரிதான் ஏற்படுத்தினார் என்று கண்ணுற்ற சாட்சிகளின் சாட்சியங்கள் அரசுத்தரப்பு வழக்கினை நிரூபணம் செய்யும் பொருட்டு சாட்சியம் அளிக்காத நிலையிலும், பார்வை மகசர் சாட்சிகள் ஆகியோர் நீதிமன்றம் வந்து சாட்சியம் அளிக்காத நிலையிலும், இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்த காவல் அதிகாரி மற்றும் குற்ற இறுதியறிக்கையினை தாக்கல் செய்த விசாரணை அதிகாரியின் சாட்சியத்தை மட்டுமே வைத்துக்கொண்டு எதிரிதான் மேற்படி ரங்கநாதன் என்பவருக்கு விபத்தை எற்படுத்தினார் என்று முடிவுக்கு வர இயலாது என்று இந்நீதிமன்றம் கருதியும், மேலும் இவ்வழக்கின் விசாரணை அதிகாரியே அவரது குறுக்குவிசாரணையில் இறந்த ரங்கநாதன் என்பவர் சற்று வயது முதிர்வுற்று சரிவர காது கேளாநிலை மற்றும் மனதளவில் பாதிக்கப்பட்ட நபர் என்று ஒப்புக்கொண்டுள்ள நிலையிலும், புகாரிலும் செல்லப்பட்டுள்ள நிலையிலும் மேற்படி அரசுத்தரப்பு வழக்கு எதிரியானவர்தான் விபத்து சம்பவத்தில் ஈடுபட்டுள்ளார் என்பதை தெள்ளத்தெளிவான சாட்சியத்தின் மூலம் நிரூபணம் செய்யவில்லை என்றே இந்நீதிமன்ற்ம கருதுகிறது.

**11. முடிவில்,**

அரசுத்தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சிய சான்றாவணங்களை கவனமுடன் பரிசீலனை செய்ததில், எதிரி மீது இசத பிரிவுகள் 279, 304(A)–ன் கீழ் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்க தவறிவிட்டபடியால் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி எதிரியை குற்றவாளி இல்லை என்று தீர்மானித்து குவிமுச பிரிவு 255(1)ன் கீழ் எதிரியை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. எதிரிக்கு ஆதரவாக எழுதிக்கொடுக்கப்பட்டுள்ள பிணை ஆவணங்கள் மேல் முறையீட்டு காலத்திற்குப் பிறகு ரத்து செய்து உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்து, என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழை நீக்கம் செய்யப்பட்டு, இன்று 16.03.2026 ஆம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ARUN M C
Digitally signed by ARUN M C
Date: 2026.03.16 15:12:07 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கீழ்பென்னாத்தூர்.

**அரசு தரப்பு சாட்சிகள்:**

அ.சா.1 – அண்ணாமலை

அ.சா.2 – காசி

அ.சா.3 – ராம்கி

அ.சா.4 – ராம்குமார்

அ.சா.5 – தமிழரசு
அ.சா.6 – சந்திரசேகர்

**அரசு தரப்பு சான்றாவணங்கள்:**

அ.சா.ஆ.1 – புகார் மனு
அ.சா.ஆ.2 – மோட்டார் வாகன ஆய்வு அறிக்கை
அ.சா.ஆ.3 – முதல் தகவல் அறிக்கை
அ.சா.ஆ.4 – மாதிரி வரைபடம்
அ.சா.ஆ.5 – பார்வை மகசர்
அ.சா.ஆ.6 – சட்டப்பிரிவு மாற்று அறிக்கை
அ.சா.ஆ.7 – பிரேதவிசாரணை அறிக்கை
அ.சா.ஆ.8 – விபத்துப்பத்திவேட்டுடன் கூடிய காயச்சான்று
அ.சா.ஆ.9 – பிரேத பரிசோதனை அறிக்கை

**அரசு தரப்பு சான்று பொருட்கள்** : இல்லை
**எதிரிகள் தரப்பு சாட்சிகள்** : இல்லை
**எதிரிகள் தரப்பு சான்றாவணங்கள்** : இல்லை
**எதிரிகள் தரப்பு சான்றுபொருட்கள்** : இல்லை

ARUN M C
Digitally signed by ARUN M C
Date: 2026.03.16 15:12:30 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கீழ்பென்னாத்தூர்.

<u>**பின் குறிப்பு:**</u>

1. வழக்கு விசாரணையின்போது எதிரி நீதிமன்ற பிணையில் இருந்தார்.
2. வழக்கின் முடிவு காவல் துறைக்கு தெரிவிக்கப்பட்டது.
3.வழக்கு விசாரணையின் போது எந்த ஒரு சாட்சியும் மூன்று நாட்களுக்கு மேல் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை.

//உண்மை நகல்//

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கீழ்பென்னாத்தூர்.